செ.வெ.எண்: 796 25.4.08

# செய்தி குறிப்பு

தமிழக அரசு, சென்னை அருகிலுள்ள அடையாரின் சுற்றுச்சூழல் தாக்கத்தை உணர்ந்து அடையாறு ஓடை மற்றும் முகத்வாரத்தை (358 ஏக்கர்) மறுசீரமைக்க, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 117 நாள் 11.10.2006 அன்று விடுவித்தது. இத்திட்டத்தை அமல் படுத்த "அடையாறு பூங்கா அறக்கட்டளை" தலைமை செயலாளர் தலைமையில் நிறுவப்பட்டது.

அடையாறு பூங்கா அறக்கட்டளை TNUIFSL நிறுவனத்தை இத்திட்டத்திற்கான வரைவு திட்டத்தை உருவாக்க தகுந்த ஆலோசகர்களைக் கண்டறிந்து செயல்முறைப்படுத்தவும் இந்த மாதிரி திட்டத்தினை உருவாக்க, பொதுவான ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரவும் உத்தரவிட்டது.

அடையாறு பூங்காவின் மாதிரி வரைவு திட்டம் கடந்த ஆகஸ்ட் மாதம் பொது மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வெளியிடப்பட்டது.

அடையாறு பூங்கா அறக்கட்டளை பொறுப்பாட்சி குழுக் கூட்டம் தீர்மானத்தின் படி 58 ஏக்கருக்கான வரைவு திட்ட மதிப்பீடுகள் ஆலோசகர்கள் மூலம் தயாரிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டு, M/s Pitchandikulam Forest consultants நிறுவனத்திற்கு பணி மேற்கொள்வதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. இதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 2.6.2008 முதல் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை நாள்தோறும் மேற்பார்வை செய்ய M/s Inmaas Ltd. எனும் நிறுவனம் திட்ட மேலாண்மை ஆலோசகராக நியமிக்கப் பட்டார்கள். இதுவரை சுமார் ரூ.1.74 கோடியளவிற்கு (அதாவது நில மேம்பாடு மற்றும் நில பகுப்பாய்வு) திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உள்ள அனைத்துப் பணிகளும் 30 மாத காலத்திற்குள் முடிவுறும்.

M/s IL&FS Eco Smart Limited எனும் நிறுவனத்திற்கு 300 ஏக்கருக்கான வரைவுத் திட்டத்தை உருவாக்க பணி உத்தரவு வழங்கப்பட்டு 09.06.2008 முதல் ஆய்வு தொடங்கப்பட்டது. இவர்கள் தற்போது இடைக்கால அறிக்கையை தாக்கல் செய்துள்ளனர். மேலும் இந்தப் பணி இன்னும் 3 மாதத்திற்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு ஊராட்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 25.9.08 அன்று அடையாறு பூங்காவில் மரக்கன்றுகள் நடும் பணிகளை தொடங்கிவைத்தார். அப்போது சுமார் 1000 மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் சுமார் 300 மூலிகைச் வகை செடிகளும் மற்றும் 50000 மரக்கன்றுகளும் வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தப் பூங்காவில் நடப்படவிருக்கிறது. பசுமைப் பகுதியின் மாதிரி திட்டம், விரிவாக்கப்பட்ட கண்காட்சி மையம், மீன் வளர்ப்பு மையம் போன்றவற்றை பார்வையிட்டு, வேலைகள் கால தாமதமின்றி முடியவும், நல்ல தரம் வாய்ந்ததாக அமையவும் அறிவுரைகள் கூறினார்.

இவருடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர், திரு. க, தீனபந்து இஆப., அவர்களும் திரு க. பணீந்தர ரெட்டி, இஆப., மேலாண் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், மற்றும் அதன் அதிகாரிகள் மீன் வளர்ப்புத் துறை அதிகாரிகள், ஒப்பந்ததாரர் குழுவும், திட்ட மேலாண்மை ஆலோசகர்களும் இருந்தார்கள்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.